





ஒரு சிரட்டைக் கஞ்சி












Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

10.6-2024

ஒரு சிரட்டைக் கஞ்சி

1	புத்தர் நகைக்கிறார்
2	ஈழ ஜனநாயகம்
3	ஏழை
4	ஈழக் கனவு
5	ஈர விழிக் காவியம்
6	கலைந்த கோலம்
7	காதல் காவியம்
8	காதல் மனம்
9	காதல் ஒரு வரம்
10	காதல்
11	நெஞ்சின் அலைகள்
12	ஒரு சிரட்டைக் கஞ்சி
13	பக்தி
14	பயணம்
15	பயங்கரவாதம்
16	சாம்சன் டிலைலா
17	யுத்தமும் இரத்தமும்

புத்தர் சிரிக்கின்றார்



பிரம்மாஸ்திரம், நாராயண அஸ்திரம், பாசுபதம்,
தவமிருந்த பக்தர்களுக்கு, பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்
வழங்கிய பேரழிவு ஆயுதங்கள், என் அமைதியை
உங்களுக்குத் தருகிறேன் இயேசுவின் நற்செய்தி



சிவனுக்குத் திரி சூலமும், கிருஷ்ண பரமாத்மாவுக்கு
சுதரிசன சக்கரமும், குமரனுக்கு வேலும்,
பலவான் ஹனுமானுக்கு தண்டாயுதமும் ஆயுதங்கள்
இந்துக் கடவுளர் எல்லாம் வல்லமையின் வடிவங்கள்




வாலியை வீழ்த்தி, இராவணேஸ்வரனை வதைத்ததோ
வல்ல இராமபாணம், சிசுபாலன் தலையைக் கொய்ததோ
சுதரிசனச் சக்கரம், பரசுராமன் ஆயுதமோ பரசு
க்ஷத்திரியரைப் பழிவாங்கும் பிராமண வாரிசு

பலி, வேள்வியை ஒழித்து மன்னன் பிம்பிசாரனுக்கு
உண்மையைப் புகட்டிய மகான், வேதக் குப்பைகளைப்
புறந்தள்ளி, நம்பிக்கை கடந்த வாழ்ந்தறியும் சத்தியமே
உண்மை, வாழ்ந்தறியுங்கள், அறை கூவிய பெருமான்

துக்கம், துக்கத்தின் காரணம், துக்க நிவாரணம்,
துக்க நிவாரண மார்க்கம் கண்டறிந்த ஞானி
அட்டாங்க மார்க்கம், பஞ்ச சீலம், தம்மம் அருளிய
கருணையின் திருவுருவமோ மெய்ஞானி





ஊனை உருக்கி, உயிரைச் சிதைத்து, உலகை எரிக்கும்
அணு குண்டுப் பரிசோதனைக்கு இட்ட பெயரோ
“ புத்தர் சிரிக்கின்றார்”, நீதி, நியாயம் கடந்து
பௌத்தத்தைப் பழிக்கும் விதண்டாவாதம்?

அகிம்சையின் பிதாமகனுக்கும், அணு குண்டிற்கும்
முடிச்சுப்போட்ட அவலம், “கிருஷ்ணா சிரித்திட”
பாபர் மசூதியை இடித்து, இராமர் கோயில் எழுந்திட,
மதவாதச் சகதியில் இந்தியா சிக்கிய துயரம்

மகாவீரரும், போதி மாதவனும்,
மகாத்மாவும், கபீரும், ஷீரடி பாபாவும்
உலாவிய மண்ணில்-அணுவாயுதங்களுக்கு
கும்பாபிஷேகமும், தீபாராதனைகளும்

Smiling Buddha (MEA designation: Pokhran-I) was the code name of India's first successful nuclear weapon test on 18 May 1974. The nuclear fission type bomb was detonated in the Pokhran Test Range of the Indian Army in Rajasthan. As per the United States military intelligence, the operation was named as Happy Krishna.

அன்பே தெய்வம், உண்மையே வேதம்,
அகிம்சையே அமைதியின் நாதம்-புரியாத உலகம்,
ஆணுவாயுதங்களை வரமாக்கிட-வல்லரசுகளிடம்
பிரம்மாஸ்திரம், நாராயண அஸ்திரம், பாசுபதம்

பெருமான் புத்தரும், இயேசு கிறிஸ்துவும் வாழ -மாந்தர்
உள்ளங்களில் கடுகளவும் இடமில்லை, வானுயர்ந்த
கோயில்களில் வாழ்வதெல்லாம் மதவாதம், இனவாதம்
வல்லரசுகளில் கைகளில் அணுவாயுதம்

இன்றும் ஸ்ரீகிருஷ்ணனின் பாஞ்சன்யமும்,
அருச்சுனனின் தேவத்தமும், பீமனின் பௌண்டரமும்
முழங்கிட, உலக அமைதியோ கேளாத நாதம்




யுத்தத்தின் இலக்கு வெற்றியே அன்றி தர்மம் அல்ல
குருஷேத்திரத்திலும் நிரூபணமான உண்மை
வாய்மையே வெல்லும் வெற்று வார்த்தை ஜாலம்

The Pokhran test was a bomb, I can tell you now.... An explosion is an explosion, a gun is a gun, whether you shoot at someone or shoot at the ground.... I just want to make clear that the test was not all that peaceful.

—Raja Ramanna, to Press Trust of India in 1997

எதிரியையும் அன்பு செய்யுங்கள், உங்களை
வதைப்போருக்காக வேண்டுங்கள், மனிதம்
ஏற்காத செய்தி- இன்றும் கழுமரத்தில் இயேசு,
காலடியில் கண்ணீரோடு தாய் மரி

பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது
பகைமையை அன்பினால் தணியுங்கள்
தீமையை எதிர்க்காதிர்கள்-எதிர்த்தால்
தீமை உங்களைப் பற்றிக் கொள்ளும்





இருமை கடந்து நல்லோர் மேலும்,
தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கச் செய்யும்
இறைவன் , எல்லோர் மேலும் மழையைப் பொழியச்
செய்யும் அன்பே உருவான தகப்பன்

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கு அமைதி-கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி-
உன்னதமும் நல்மனமும் ஒன்றே அது நம்முள்ளே
இனம், மதம், மொழி கடந்த சகோதரத்துவம்
அணவம் கழித்த குழந்தை உள்ளத்தவருக்கே வரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-05-2024

ஈழ ஜனநாயகம்





அஸ்தமனம் காணாத பிரிட்டிஷ் சாம்பிராஜ்சியத்தின்
"யூனியன் ஜாக்" கொடி இறங்கிட-சிங்கக் கொடி
ஏறிப் பறந்திட, மலர்ந்த ஈழச் சுதந்திரம்
மூவின மக்களின் இன ஒற்றுமையோ சிகரம்

பேரினவாதிகளுக்குச் சாதகமான சுதந்திரம்
சிறுபான்மையினருக்கோ சோகச் சரித்திரம்,
மூவினம் ஒன்றுபட்டுப் பெற்ற சுதந்திரம்
சிங்களமே ஆளும் இனம் மாறாத மந்திரம்

இனவாதம், மதவாதம், பிரிவினை வாதம்
தலை தூக்கிட, முரண்பட்ட இனங்கள்,
முப்பது வருடத் தமிழ் ஈழ விடுதலைப் போரில்
எல்லோர் மனங்களிலும் ஆறாத இரணங்கள்

தமிழரை வழி நடத்த தானைத் தலைவன் ஒருவனில்லை,
மூவினத்தை ஒன்றுபடுத்த நீதியான தலைவனில்லை,
இனவாதம், மதவாதம், பிரிவினை வாதம் இன்றும்
நாட்டை வருத்தும் முடக்குவாதமான அவல நிலை





தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம்
இரத்தக் களரியானது, தம்முள் போராடி
மடிந்த விடுதலை இயக்கங்கள், வடக்கு. கிழக்கு
எனப் பிரிந்தழிந்த விடுதலைப் புலிகள்

பேரினவாதம் கக்கும் சீவர ஆடைகள்
பௌத்தத்தை இழிவு படுத்த, பிரிவினை கோரும்
தமிழர் நாட்டைப் பிளவுபடுத்த, இன ஒற்றுமை
கனவாய் கலைந்து, பழங்கதையானது

பேரினவாத அரசியல்வாதிகளால் சிகரம் தொட்ட
ஊழல், கொள்ளைபோன திறைசேரி, நாடோ
அல்லோலகல்லோப்பட, ஒன்றிணைந்து
ஜனாதிபதியை விரட்டிய ஜனநாயகவாதிகள்

சர்வதேசத்திடம் கையேந்தும் தேசம்-சர்வாதிகார
ஊழல் அரசியல் வாதிகளால் நாசமாகிட,
வானைத் தொட்ட விலை வாசி, சுமையால் குறுகி
கூனல் மிருகமாய் நடக்கும் இலங்கை வாசி



ஆட்சியைக் கைப்பற்ற அரசியல் மேடைகளில்
இனவாத, மதவாத, பிரிவினை வாதங்கள்
ஒன்றுபட்டு நாட்டைக் கட்டி எழுப்ப-நாளும்
உதவாத இனவாத யாகங்கள்

முன்னாள் போராளிகள் இந்நாள்
அரசியல் தலைவர்கள், குருடனுக்கு குருடன்
வழி நடத்த, தமிழன் ஒற்றுமை குழியில்
விழுந்த அவலங்கள்.

வாக்குச் சீட்டை விற்கும் ஏழ்மை-வெற்று
வாக்குறுதிகளை நம்பி ஏமாறும் அறியாமை
இனவாத, மதவாதச் சக்திகளுக்கு பலியாகி
நாட்டைச் சீரழிக்கும் சிறுமை மாறாத தொடர் கதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-31-05-2024

ஏழை யார் ?

பொன்னும், மணியும் மலையாய்க் குவிந்து கிடக்க
கள்வர் திருடுவாரோ?, கறையான் அரிக்குமோ?
செல்வன் நெஞ்சில் கவலையின் வாசம்-செருப்புத்
தைக்கும் ஏழையின் மனதிலோ வற்றாத சந்தோஷம்





தூக்கமின்றி மாடியில் உலாவிய மனதில்
மலையளவு கவலை, ஏழையின் குடிலில்
ஓயாது ஒலிக்கும் பாடலின் இனிமை , பின்
பரவசமான தூக்கத்தில் ஓய்வின் பெருமை

பொத்தல் விழுந்த குடிசை வாசிக்கு, இரவில்
நிலவும், வான் நட்சத்திரங்களும் உறவு
மாளிகையில் வாழும் செல்வனுக்கு, வானும், நிலவும்
தெரிந்தும் மனதில் கவலையின் தீராத உறவு



செருப்புத் தைத்துப் பிழைக்கும் வாழ்வில்
தைக்க முடியாத வறுமையின் கிழிசல்கள்
ஏழை கண்டதோ செப்புக் காசு- செல்வன்
மாளிகையில் கொட்டிக் கிடப்பதோ பொற்காசு

நாளும் இரவில் பாடும் ஏழை, வாழ்வை
உண்டு சுவைத்து கொண்டாடும் பெருமை வியப்பளிக்க
ஆனந்தத்தின் இரகசியமறிய ஏழையை அழைத்து
நாளும் உன் வருவாய் எவ்வளவு வினவினான் செல்வன்



இரு செப்புக் காசுகள் ஐயா, இறைவன் கருணை பெரிது
உண்டு, குடித்துப் பாடி, உறங்கிட வாழ்வே கொண்டாட்டம்,
கவலையில்லாத மனதில் ஆழ்ந்த உறக்கமோ
இறை தந்த செல்வம் என்னும் ஆர்ப்பாட்டம்

இதோ பத்துப் பொற்காசுகள், உண்டு, குடித்து
வாழ்வைக் கொண்டாடு, தாராளமனத்தோடு
வழங்கிய மனம், ஏழைக்கோ அதிசயம்
காணாததைக் கண்ட மனதிலோ உவகையின் உதயம்

மறுநாள் இரவில் மாடியில் உலாவிய செல்வன்
கானம் கேட்காத குடிலைக் கண்டு வியந்தான்
தூக்கம் தொலைத்த இரவை தூங்கிக் கழிக்க
மதுவைத் துணையாய் அழைத்தான்

கிழிந்த பாயில் உறங்கி, உலாவரும் நிலவை கண்டு
களிப்போடு பாடும் மனம் கவலையால் வாடியது,
பொற்காசைப் பாதுகாக்க விழித்திருந்து
தூக்கத்தைக் கெடுத்து, கவலையில் தவித்தது



தூக்கம் தொலைந்திட, ஆனந்தம் மறைந்திட
கவலையால் நிறைந்த மனசு இமயமாய்க் கனத்தது
ஏழையின் கானம் கேளாது நிலவும் சோர
இரு நாட்கள் இருளாய்ப் போனது,

இரு இரவுகள் மௌனத்தில் கழிய, மறு நாள் விடியலில்
வாசலில் காத்திருந்த ஏழை-பத்துப் பொற்காசுகளையும்
பத்திரமாய்க் திருப்பிக் கொடுத்தான், என் ஆனந்தத்தை
அழித்து தூக்கத்தை கெடுத்த காசு வேண்டாம்

பொன்னுக்காய் பொன்னான தூக்கத்தை இழந்தேன்
கண்ணான தொழிலை மறந்தேன், நாளும்
பண்ணோடு இறை துதி பாடும் நிலை துறந்தேன்
என்னையே நான் இழந்து ஏழை என அறிந்தேன்

அன்று இரவில் எழுந்த ஏழையின் பாடலோ
அமுத கானம், நிம்மதி இறை தந்த சங்க நிதி
பொன்னால், வாங்க முடியாத பெருநிதி
தூக்கமோ கவலையில்லாத மனதிற்கு குபேர நிதி



காற்றான மனது வானம் பாடியாய் எழுந்து பறந்திட
காற்றினில் வரும் ஏழையின் கீதம் நெஞ்சைத் தொட
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
தூக்கத்தின் இரகசியம் செல்வனுக்குப் புரிந்தது,

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-5-2024

ஈழக் கனவு

மங்கையர் விழிகளில் கங்கைகள் பிறக்க
அறுந்த தாலிக் கொடிகள்-அன்னையர்
வயிற்றில் காங்கை எரிய, எரிந்தோ,
புதைதந்தோ மறைந்த தொப்புள் கொடிகள்

சிங்களம் மகிழ வானுயர எழுந்து பறக்கும்
சிங்கக் கொடிகள், தமிழன் மனது
துக்கத்தில் நிலைக்க, குருதியில் நனைந்த
புழுதியில் விழுந்த புலிக் கொடிகள்

மண்ணின் தணல் ஆறவில்லை
தீயும், புகையும், பகையும் ஓயவில்லை
மனமெங்கும் மலையளவுத் துயரம்
கடலும், மண்ணும் புதைகுழிகளான அவலம்

எரிந்தும் எரியாத முட்செடியில்
“இருப்பவர் நாமே” என்னும் இறை பிரசன்னம்
எரிந்து சாம்பலான தமிழ் ஈழக்கனவினில்
கண்ணீர், குருதியின் நிதரிசனம்

ஈழக் கனவினை என் ஈரக் கருவிழிகள்
களிப்புறக் காணுமுன் மூடித் துயிலுறுமோ
உடல்தான் மூச்சடங்கி பேச்சடங்கி
வாடித் துயறுருமோ?

மா வீரன் கண்ட கனவு-மண்ணோடு மண்ணானது,
உடலும், உறவுகளும் தீயோடு சங்கமிக்க,
தமிழ் ஈழம் பொய்யாய், பழங்கதையாய்,
கனவாய் மெல்லக் கலைந்து போனது



Estimates of death toll:


- **1983-2001**: 78,363 Tamil civilians killed: 53,132 killed + 25,231 disappeared forever (TCHR, 2004) [43]
- **2002-2008 Dec**: 4,867 Tamil civilians killed: 3,545 killed + 1,322 disappeared forever (NESHOR)[44]
- **1983–2009**: *At least* 100,000 killed[45] [46] [47]
- **1983–2009**: 80,000–100,000 killed (UN, 2009)[48] [49]
- **1983–2006**: 70,000 killed[50] [51]
- **2008–2009**: 40,000 Tamil *civilians* killed (UN, 2011)[52] [53] [54] [55]
- **2008–2009**: 146,000 Tamil *civilians* unaccounted[56] [57] [55] [58]
- **2009 Jan-May**: 169,796 Tamil civilians killed (ITJP, 2021) [59]
- **2008–2009**: 70,000 Tamil *civilians* unaccounted (UN, 2012)[60] [61] [62]
- **Throughout war**: 3,700 - 4,100 civilians of all ethnicities killed by LTTE in attacks.[63]
- 800,000 displaced at peak in 2001[64]

16 May 2009: Sri Lankan Government declared a military defeat of LTTE.[65]

Casualties and losses	
• 28,708 killed[30] • 111,655 wounded[31] [32] of which 40,107 permanently disabled[30] • 5,000 Missing in action [33] [34] • 1,165 killed and 3009 wounded [35] [36]	• 27,000 killed[37] [38] [39] [40] 11,644 prisoner of war[41] • 40000+ Tamil civilians killed[42]

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-7-5-2024

ஈர விழிக் காவியம்



வண்ணாங் குலைந்த சித்திரமாய்
வடிவம் கலைத்த சிற்பமாய்-விழிகளில்
நீர் நிற்பதா? உதிர்வதா எனத் தயங்க,
நெஞ்சம் நொருங்க அவள் பாவம்



ஒரு வார்த்தை சொல்லாமல் கண் மறைந்தான்
கடல் கடந்து கன்னி சொன்ன காதலுக்கு
பதில் சொல்லாமல், போய் வருகிறேன் என
விடை பெறாமல் என்னைப் பிரிந்தான்

கண்ட முதல் நாளில் கன்னி மனதில்
“முதல் மனிதனைக் கண்ட மயக்கம்”
கவிதை சொல்லிட, கலா இரசிகையாய் மாறி
மனதில் காதல் உலாவர, சொல்லத் தயக்கம்

கள்ளங் கபடற்ற மனம், கன்னி
என்னைத் தொட்டும் பார்க்காத குணம்
கண்ணியமான பேச்சு, கருத்தில்
தாய்தான் அவன் உயிர் மூச்சு



என் காதல் புரிந்தாலும், புரியாதவனாய்
அவன் பாவம், கனிவோடு என்னை கண்ணிமாய்
நடத்திடும் அரிதான சுபவம், காதலுக்கு
என் மனதில் இடமல்லை சொல்லத் தயங்கிய பாவம்

பழகிய சில மாதங்களில்-மனதில் வசந்தத்தின்
கோலங்கள், பருவத்தில் அழகின் அதிசயங்கள்,
என் அழகில் அவன் மயங்கவில்லை,
அன்பிற்குத் தலை வணங்கும் புனிதனாய் அவன் நிலை



கட்டழகி என்னை காதல் தேனீக்கள் வட்டமிட
கட்டழகனாய் கண்டவனோடு என் மனம் ஊர்வலம்
கடல் கடந்தே, பிரான்சில் எம் திருமணம்-பின் இலண்டனில்
பிள்ளைகள் மூன்றுக்குத் தாயாக வாழ்வோ இன்பவனம்

காமம் இனிதென்று கவர்ச்சியில் மயங்கிய கன்னி
காமம், மோகம் கழிந்திட, கணவனோ “யயாதி” என்ற
உண்மை புரிந்திட, விக்கித்த தாய்மை-குடும்பத்தை
கைவிட்டு கன்னியரை நாடிய ஆண்மையோ சிறுமை

பூ இதயம் செந்தீயில் கருக, தாய் உள்ளம்
ஒரு கண்ணாடிபோல் உடைந்து நொருங்க,
விழிகளில் கங்கை, அடிவயிற்றில் காங்கை
வாழ்வேன் என்ற தாயின் அசையாத நம்பிக்கை




சுமை தாங்கி இல்லாத வாழ்வோ போராட்டம்,
மூளை வளர்ச்சி குன்றிய கடைசி மகனால்-
வாழ்வில் ஆனந்த நீரோட்டம், பிள்ளைகள் மணம்
முடித்திட, இளைய மகனோடு கொண்டாட்டம்

இளையவனும் காப்பகத்தில் கல்வி பயின்றிட,
பேரக் குழந்தைகளைச் சீராட்டி, சொந்தங்களோடு
சொந்தங் கொண்டாடி உழைத்து உண்ணும் வாழ்வு
எவரிடமும் கையேந்தாத தாய்மையின் களிப்பு



நிலவு தனியே காய்கின்றது, மெட்டி குலுங்க
காட்டில் நதி சலசல எனத் தனியே பாய்கின்றது
ஒற்றைக் குயில் கரைகின்றது, மல்லிகை
முல்லை மணந்திட பூத்துச் சிரிக்கின்றன

தன் கதையில், தனித்தே கானகம் சென்ற இராமன்
வைதேகி காத்திருந்தும், காதலிலும் கடமை பெரிது
தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய அன்னைக்காய்
பிரமச்சாரியாய் வாழ்வை அர்ப்பணித்த கவிஞன் நேர்மை



பல்லாண்டு போனபின் பழகிடக் கிடைத்த பழம் நட்பு,
இன்றும் கண்ணியமாய் கவிதை பகிர்ந்து இன்புறும் கற்பு
சொல், செயல், சிந்தையில் தூய்மை, தாய்மையே
தான் காணும் கடவுள் என்ற உண்மை



மாலையும், கைதட்டலும் கடந்து,
தனிமையில் அவன் வாழ்க்கை, சோகமில்லை
பூண்ட விரதம் கலையவில்லை
நட்பில் பேதமில்லை, நாதமோ நாயனமான நிலை

கண் பார்த்து நெஞ்செழுதும் காதல், இளமையின்
தேகக் கவர்ச்சிதானா? காதல் பொய்யா? பழங்கதையா?
மெல்லக் கலையும் கனவா? ஒன்றும் புரியவில்லை

அண்ணலும், நோக்க, அவளும் நோக்க
கண் பார்த்து நெஞ்செழுதிய
வைதேகி வாழ்விலும் சுகம் இல்லை




போதி மரத்தடியில் ஞானம் கண்ட பெருமான் புத்தர்,
ஞானத் துறவியாய் ஈர விழிகளோடு மாளிகையில்
அன்னை யசோதரை? கானகத்தில் குழந்தைகளோடு
தாய் சீதை, போராட்டமா பெண்மை, புரியவில்லை



நில், கவனி, காட்டில் தனியாய் உன் பயணம்
இருண்ட காட்டில் வெளிச்சம் இல்லை
பெண்ணே!, உன்னை கடித்துக் குதற
காம ஓநாய்களின் கூட்டம் ஒரு புறம்

துணிவோடு அவள் தனியாய் நடந்தாள்
தாய்மையின் சுமைகளை களிப்போடு சுமந்தாள்
கொடுத்திட உயர்ந்த கரங்கள்- இரந்திட
ஒருபோதும் தாழவில்வை, உழைத்தே உண்டாள்



காதல் என்னும் வடிவம் கண்டேன், கற்பனையில்
இன்பம் கண்டேன் மாலையிடும் நாளை
எண்ணி மகிழ்ந்திருந்தேன் ஆசைக் கன்னி

நாளெல்லாம் திருநாளாக, நடையெல்லாம் நாட்டியமாக
காலவெள்ளத்தில் கற்பனை எல்லாம் பழங்கதையாக
வாழ்வோ கானகத்தில் கைவிட்ட தமயந்தி கதையாக
சோகவனச் சீதையாய் வாழ்வு மாறியது

தனிமையில் இனிமை காணும் கவிஞன்
தன்னோடு வாழ இறை ஈந்த வரமோ தனிமை
அறிந்த பக்தி மனம் சூனியமானது
கவிதையான வாழ்வு பரவசமானது

Until you get comfortable with being alone, you'll never know if you're choosing someone out of love or loneliness.

Quotes & Thoughts

~ Mandy Hale ~



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-5-2024

இதயம் எழுதிய காவியம்



காதலே உன் பெயரைக் கரையில்
எழுதினேன், அலைகள் அழித்ததடி
வண்ணப் பூக்களில் எழுதினேன்
ஒரு மாலைக்குள் உதிர்ந்ததடி

காய்களில் எழுதினேன் கனிந்திட
அணில்களும், கிளிகளும் உண்டதடி
பனிச்சிகரத்தில் எழுதிவைத்தேன்-
கதிர் பட, அருவியாய்க் கரைந்ததடி



கார் முகில் எழுதினேன், மழையாய்க் கரைந்ததடி-
கவிதையால் எழுதினேன் காண மறுத்தாயடி
அழியாது, கலையாது என உன் இதயத்தில் எழுதினேன்
ஏனடி கண்ணம்மா என் இதயத்தை உடைத்தாய் நீ

பூக்களைத் தந்தேன், முட்களைத் தந்தாய்,
இதயத்தைத் தந்தேன், என் உதயத்தைப் பறித்தாய்
புரிந்தும், புரியாதவளாய் அன்பே உன் சுபாவம்
ஈரவிழிக் காவியமான என் வாழ்வோ பரிதாபம்

என் இதயத்தில் நீ இருந்தும்-உன் இதயத்தில் நானில்லை-
என் மனதிலே இமயச் சோகம், இரு விழிகளிலும்
நீ இருந்தும், காதல் கபோதியான துயரம்-பார்வதி,
தேவதாஸான வாழ்வும் துன்பக் காவியமான சாபம்

விழிகளில் காதல் மொழிந்தும்
மொழி புரியாத பாவம்-இதயம்
கூவி அழைத்தும்-சோடிக் குயிலாய்
குரல் கொடாத சுபாவம்

எங்கிருந்தாலும் வாழ்க, இதயமும்
அமைதியில் வாழ்க, மஞ்சள்
குங்குமம் வாழ்க பாடல் ஆனதடி
ஒரு தலைக் காதல் சாபமானதடி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-05-2025

கலைந்த கோலம்



சுந்தர மதிமுகத்தில் நீங்காத சோகத்தின் கருமை,
மோகன மந்திரம் மொழிந்த விழிகளில்-முட்டிட
மோதி நிற்கும் கண்ணீர்க் கங்கை, அணைத்துக்
காக்கத் துடிக்கும் கரங்களுக்குள் ஈன்ற குழந்தை



புன்னகை சிந்திய செவ்விதழ்களில்-சொல்லியழ முடியாத
சோகம், பொன்னும், பட்டுமணிந்த மேனியில் புழுதியும்,
வறுமையும் படர்ந்த பாவம், தெருக் குப்பையாய் மாறிய
வாழ்வு, மனதிலே போராடத் தாய்மையின் துணிவு

இளமை கொலுவிருக்க, இயற்கை கவர்ந்திழுக்க
கவர்ச்சி, காமம், மோகம் எல்லாம் காதல் என
ஏமாந்த சுபாவம், கருவுற, சொந்த பந்தம் உறவை
அறுத்திட, விழித்த இதயத்தில் ஏமாந்த பாவம்

சோடிக் குயிலாய் பாடிய மனதில் சோகம்-
தோகை மயிலாய் ஆடிய கால்களோ முடம்
தீயில் விழுந்த மலராய் மங்கை-கழுமரம்
சுமக்கும் வாழ்வோ கல்வாரிப் பாதை

மங்கை அழகை தேன்மது எனச் சுவைத்த காமம்,
மனைவியாய் ஏற்க முகம் மறைத்த அரக்க சுபாவம்,
வறுமையால் தெருவிற்கு வந்த தாய்மை,
நாதியற்றுத் தெருவிலே பிரசவித்த குழந்தை

தாய்மை விழிக்க, குருதியும், புழுதியும்
குழந்தையை அணைக்க, செய்வதறியாத இதயத்தில்
குமுறும் சோக எரிமலை, கோவையாய் சிவந்த
விழிகளிலோ புல்லரைத் தீயக்கும் வெறுமை

சுட்டும் சுடர் விழிகள் உலகைச் சுட்டெரிக்க
பட்டும், பீதாம்பரமும் அணிந்த விழிகள் மேனியை
மேய்ந்து, குரு, லேவியராய் கடந்து நடக்க,
நல்ல சமாரியனுக்காய் ஏங்கும் இதயத்தில் கலக்கம்

மலர்கள் சூட்டி, மஞ்சள் சூட்டி, திலகம் சூட்டி, வளையல்
பூட்டி, மண மாலைக்காய் ஏங்கிய மங்கை-மை காணாத
விழிகளிலே கங்கை, நெய் காணாத குழலில் புழுதி
பொய்யான காதலால் வாழ்வோ துன்பச் சகதி

இளமை கொலுவிருக்கும், இனிமைச் சுவையிருக்கும், இயற்கை
மணமிருக்கும் பருவத்திலே, பெண்ணில்லாமல் சுகமில்லை
உலகத்திலே, காமுகரும், விபச்சாரனும் மலிந்த உலகில்
மனிதனாய், கணவனாய் பேதை வாழ்வில் யாருமில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-05-2024

காதல் காவியம்



சுரிகுழலில் ஜாதி மல்லிகை பூத்தாட
பிறை நுதலில் வண்ணத் திலகம் கூத்தாட
கனிவாய் இதழ்களில் புன்னகை- காமன் கணையென
நெஞ்சை வேல் விழிகளிலோ காதல் கவிதை



கண்டு காதலானதும் உன்னால்-கனவிலும்
நினைவிலும் கவிதை பாடியதும் உன்னால்
காதல் சிறகடித்துப் பறந்ததும் உன்னால்-இன்று
கண்ணீர்க் கடலில் தத்தளிப்பதும் உன்னால்

என் விழிக்குளத்தில் பூத்த செந்தாமரை நீயடி
உன் இதயக்கமலத்தில் இன்னிசை பாடும்
மதுவண்டு நானடி, என் தேன் நிலவாய் நீயடி
உன் காதல் வானாய் நானடி



இன்று காதலும் கலைந்த கனவாக
கண்மணி நீயும் கண் மறைந்த நிலவாக
பொழுது சாயமுன் உதிரும் மலரானேன்
இறகொடிந்த பறவையானேன் ஏனடி

என் விழிகளில் காயாத ஈரம்
என் மொழிகளில் அழுகையின் பாரம்
நீயில்லாத உலகோ நிலவில்லாத வானம்
என் காதலோ ஈரவிழிக் காவியம்

முதல் வரி நீயும், அடிவரி நானும் அமைந்த
இருவரிக் குறளாய் நம் காதல்
வா, சுகி காதலை அனுபவி என மனம் மகிழ
வள்ளுவன், வாசுகியாய் நாமடி

கல்லில் பொறித்த எழுத்தென நம் காதலை
நினைத்தேன், நீரில் எழுதிய எழுத்தானது
காதல் நிஜம் என் உரைத்தேன்-வாழ்வோ
நூலறுந்த காற்றாடியானது, ஏனடி?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-06-2024

காதல் மனம்







பெருங்குடிகள் கூடும் சந்தையில் பட்டும், பல வண்ண
மணிகளும் விற்கும் பேரழகு, கண்ட மன்னன் என்
மனதிலே காதலின் திருவழகு, பட்டாய்ப் போர்த்து
மணியாய்ச் சூட இதயத்திலே உலாவிடும் காதல் நிலவு

விழிகண்ட கண்ட மோகன விம்பம்-ஷாஜகான் என்
மனதை கொள்ளை கொண்ட கன்னி நூர்ஜகானோ
அழகின் நூதன விம்பம்-காதலோ இதயத்தின் மொழி
கன்னி மனதை ஆட்கொள்ள கவிதையே என் மொழி

முத்தோ இவள் அழகின் இரத்தினமோ?
காதல் வித்தாய் நெஞ்சில் விழுந்த கன்னி,
பித்தான மனம் இவளின்றி வாழ்வில்லை,
பேதைபோல் துடித்திட காதலான என் மனம்

நடையோடு கார்குழல் நாட்டியமாட
கொடியிடையில் மணிமேகலை கட்டியம் கூற
இதழ் பொழிந்த புன்னகையோ தேன் மழை
பூவிழி காதல் பொழிய மனதிலோ பூ மழை





கிள்ளை மொழியில் கவிதையின் அரங்கம்
அன்ன நடையில் தோகையில் நடனம்
பொன்மேனியில் பூக்களின் நறுமணம்
நங்கையோ அழகின் ஆலாபனம்

விழி காண கன்னியோ அழகின் அவை
செவி இனிக்க மொழிகளில் கவிதைச் சுவை
சுவாசம் மணக்கும் மேனியிலோ பூவாசம்
நேசம் மணக்கும் நெஞ்சிலோ காதல் வாசம்

சங்கினுள் ஒலிக்கும் சந்தம்போல்-என்
நெஞ்சுக்குள் ஓயாத காதல் ராகம்
மண்ணும், மழையுமாய் மனங்கள் கலந்திட
வாழ்வோ காதலின் தேவராகம்

நாணிச் சிவந்த நங்கையின் வதனத்தில்
காதல் கோலம், திருமணத்தில் கூடிக் கலந்திட
இரு மனம் கலந்த வாழ்வோ காதல் தேசம்,
இதயத்திலும், சுவாசத்திலும் காதலின் வாசம்

என் உயிரிலும் மெய்யிலும் கலந்த காதல்
இவளின்றி வாழ்வே சாதல், இரு மனம் இன்புற்று ஈந்த
குழந்தைகளோ பெருநிதி, பதிநான்காவது பிரசவத்தில்
என்னைத் தனியாய்த் தவிக்க விட்ட காதலியோ குபேரநிதி



காதல், காதல் , காதல் என் மனம் களித்திட
காதலை அறிந்ததும் இவளால், காதலைப் புரிந்ததும்
இவளால், காதலனாகிக் களித்ததும் இவளால்
இன்று சாதலே வா என அழுவதும் இவளால்



ஒரு கணமும் என்னைப் பிரியாத தேவி
உக்கிரமான களத்திலும் காதலால் எனக்கு
துணை நின்ற தோழி, தாயாய் என்னைச் சீராட்டிய
அம்மை, என் விழிகளிலோ இனி என்றும் கங்கை

பொன் மேனியிலே என்றும் பூவாசம்
பூ இதயத்திலே நாளும் புதிய காதல் வாசம்
எந்நாளும் எம் இதயங்களோ காதல் தேசம்
இன்று துடிக்கும் மனதிலோ தீராத சோகம்

மண்ணை நான் ஆள மன்னவன்
என் மனதை ஆண்ட காதல் தேவதையோ பூபாளம்
மாண்டு விழிகள் மூடி மீளாத் துயில் கொள்ள
என் இதயத்தில் ஓயாத முகாரி ராகம்



கண் பார்த்து நெஞ்செழுதிய என் காதலே,
உன்னுயிர் விண் போனாலும்,
மண் மூடி உடலை மறைத்தாலும்
என்னுயிரில் கலந்த நம் காதல் மறையாது



நீ தூங்க கண்ணே, ஒரு நாள் உன்னருகே நான் தூங்க
உன் காதலன் அமைத்த மாளிகை மும்தாஜ் மஹால்,
காதல் சாவதில்லை, சாவதும் காதலில்லை
நம் காதலுக்கு மரணம் எல்லையில்லை

காதல் இதயத்தின் மொழி, கண்மணி,
நாம் இறந்தாலும் இறவாதது நம் காதல்,
இறந்தும் காதலராய் வாழ-
கட்டிய மாளிகையோ தாஜ்மஹால் தேவி

மௌனம் பேசும் மாளிகையில் தனிமையின் கொடுமை
பூ வாசம் வீசிய தென்றலில் பிரிவின் வாடை
இசையாய் கொலுசொலித்த மாளிகையில் மயான நிசப்தம்
கசையாய் என்னை வாட்டும் காதல் சோகம்



கண்ணீர்த் துளியில் பூத்த மலர்கள் சோகம் சொல்ல-
காதல், அழகிய சிறையானதென்ன? பொங்கும்
காவிரிபோல் நெஞ்சம் கொந்தளிக்க, நீயில்லாத
கரையில் மனமோ தனி மரமாய் ஆனதென்ன?



கண்ணில் தோன்றும் விம்பமோ சிறுபொழுது
நெஞ்சில் நிலைத்த உன் காதல் விம்பமோ
கல்லில் எழுத்தாய் ஆனதடி-நான் வாழும் வரை
என் இதயத்தை ஆளுமடி

விழி மூடி நீ உறங்க, கான மொழி இழந்த
சோடிக் குயில்போல் நான் வருந்த, காதலே
உன்னால் வாழ்வில் நாளும் வசந்தமடி-இன்று
உன் பிரிவால் நெஞ்சில் நிலைத்த சோகமடி

அழத் தெரியாமல் விழிகள் கலங்க, காதல் நெஞ்சம்
ஒற்றைக் குயிலாய்ப் புலம்ப, நீயில்லாத மாளிகை
சுடுகாடாய் வருத்த, என்னைக் கொல்லும் தனிமை
உன்னையிழந்த மன்னனோ மணிமுடி இழந்த வறுமை




கண்டு மயங்கிய விழிகளில் கண்ணீர்க் கோலம்
தேன் மது உண்டு சுவைத்த இதழ்களில் ஆலகாலம்
காதல் சொன்ன மொழிகளில் முகாரி ராகம்
நீ இல்லாத உலகோ நிலவில்லாத வானம்



வீரத்தின் இன்பம் களத்தில் கண்டேன்
விவேகத்தின் இன்பம் மதிநுட்பத்தில் கண்டேன்
காதலே பேரின்பம் உன்னில் கண்டேன்-இன்று
உன்னை இழந்து காணாத இமயச் சோகத்தை கண்டேன்

காதல், காதல், காதல் -காதல் இன்றேல் சாதல்-
காதலால் நாளும் வாழ்வில் கொண்டாட்டம்-இன்றோ
என் இதயத்தில் சோகத்தின் ஆர்ப்பாட்டம்

மண்ணில் உடலை புதைத்து-மனதில் நினைவை
விதைத்து, கண்ணீரால் நீர் பாய்ச்சி, கலங்கி நிற்கும்
உன் காதலன் ஷாஜகான் ஏழையானேன்



கண்களில் கண்ணீர் மழைக்காலம்-காதல்
நெஞ்சில் சோகப் பூகம்பத்தின் அலங்கோலம்
காலன் வரக் காலம் உண்டோ? கடவுளே
என் காதலைக் கொன்றதில் நீதி உண்டோ?

நித்திலமே, நெஞ்செழுதிய அன்புக் காவியமே,
கத்தும் கடல் ஏழும், காசினியும் சாட்சியாக,
என் சித்தம் நினைப்புச் செய்கை உள்ளவரை
என் உள்ளம் உன்னை ஒரு போதும் மறவாது

தாஜ்மஹால் கல்லறையல்ல, காதலின் சின்னம்
அன்பினால் இன்புற்ற இதயங்கள், மடிந்தும்
காதல் தெய்வமாய் வாழும் கோயிலில்
நாளும் கேட்கும் காதலின் ஆலாபனம்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-17-5-2024

காதல் ஒரு வரம்

உனக்காக நானும், எனக்காக நீயும் உலகில் பிறக்காத பாவம்,
இருவர் வாழ்வும் வெவ்வேறு, உனக்காக என்னை மாற்றுவதும்,
எனக்காக உன்னை மாற்றுவதும் வேண்டாத தவம்
அன்பினால் ஒன்றிணைந்தால், நம் வாழ்வோ இறை தந்த வரம்



பூ விழிகளில் மலரஞ்சலி- பொன் மேனியின்
நறுமணமோ தூபாஞ்சலி, செவ்வாய்
மொழிகளில் கீதாஞ்சலி, அபிநய சுந்தரியின்
பாவங்களில் காதலுக்கு அஞ்சலி



கண்டும் காணாத பாவம்-கானம்
கேட்டும் பதிலுக்குப் பாடாத பாவம்
காதலின் வாசம் நுகர்ந்தும்-காதல்
கன்னிக்கு வரம் கிட்டாத தாபம்

புன்னகையைத் தூதுவிட்டாள் மயங்காத பாவம்
கண் நகையையால் தூது விட்டாள் கரையாத சுபவம்
ஈர விழிகளால் தூதுவிட்டாள்-காளை
இதயத்தில் காமன் கணை தைத்த இன்பம்

மஞ்சளும், குங்குமமும், மலர்களும் சூடி
பங்கய முகத்தில் புன்னகை ஜொலிக்க
கொட்டு மேளம் கொட்ட, பெரியோர் வாழ்த்திட
மங்கல நாயகி மணக்கோலம் கண்டாள்

தவமான வாழ்விற்கு திருமணம் வரமானது
இருமணம் இணைந்திட மங்கை மனதிலே
காதலின் நறுமணம்-மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரமானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-9-6-2024

காதல்



கண்டு அழகைச் சுவைத்த விழிகள் காதல், காதல் என்று கவிபாட
உண்டு சுவைக்க இதழ் சுவை, அமுதம், அமுதம் என்றே
இதயம் இசை மீட்க, கவிஞனானேன், கண்ணே உன் வேல் விழிகள்
நெஞ்சில் காமன் கணையாய்ப் பாயக் காதலன் ஆனேன்



மலரோ? முழு மதியோ? உன் முகம்
கனிவாய் மொழிகள் காதல் மந்திரமோ? என்
பஞ்சேந்திரியங்களும் பண்பாட-காதல்
பேரின்பம் என்பதை உன்னால் புரிந்தேன்

நெஞ்சில் நீ வரும் நாள் திருநாளாக-அஞ்சுகமே
என் இதய வாசலில் வண்ணக் கோலங்களடி,
பஞ்சவர்ணக்கிளி உன்னைக் கொஞ்சி மகிழ
நெஞ்சமெல்லாம் இனிக்கும் காதலடி



வண்டுபடு கூந்தலில் ஜாதி மல்லிகை மணக்க
கண்படும் இதழ்களில் காதற் சுவைகள் இனிக்க
கயலோ?, மலரோ எனும் விழிகளில் மையல்
காமன் கணை தைத்த மனதில் மோக நிலைகள்

அள்ளிக் கொள், என்னை அணைத்துக் "கொல்"
எனச் சொல்லும் அழகோ இவள்
பள்ளி கொள் பாவை என்னோடு ஊடல் கொள்
எனச் சொல்லும் காமத்துப்பாலாய் கன்னி இவள்

நித்திலமோ, நெஞ்சைக் கொள்ளை கொண்ட
காதல் இரத்தினமோ, பிறை நுதலில் வண்ணத் திலகம்,
குறை காண அழகில் என்தன் காதல் உலகம்
செவ்வாயில் திகட்டாத காதல் அமுதம்


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-01-06-2024

நெஞ்சின் அலைகள்



என் இதயமெங்கும் இமயச் சோகம்
இரு விழிகளிலும் கண்ணீர்க் கங்கையின் பிரவாகம்
கண்டு, உறவாடி மகிழ்ந்த நட்பு-காலன்
பறித்திட, கனவாகிப் போன உறவு

ஒன்றாய் வேலை செய்த காலங்கள் சொற்பம்-நன்றாய்
உறவாடி வளர்ந்த நட்பில் வண்ணக் கோலங்களோ அதிகம்
நெஞ்சினலைகளாய் நீங்காத உன் இனிய உறவு
இனி நீ இல்லை என்பதோ தீயாய் வருத்தும் பிரிவு



மரணச் செய்தி கேட்டு துடித்த மனம்-என் இதயத்தை
சுக்கு நூறாக்கிய சோகப் பூகம்பம்-காணும்
போதெல்லாம் களிப்போடு உறவாடும் குணம்
உறவோ கனவாய்க் கலைந்து பழங்கதையான தினம்

குழந்தை உள்ளம், நேர்மையின் வடிவம்
வாழும் கலைக்கு காணும் இலக்கணம்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கோட்பாடு
எல்லாம் அவன் செயல் என்ற நிலைப்பாடு

வடிவேலனாய் அழகிய உருவம்
பேசும் மொழிகளிலோ அன்பின் கலைநயம்
உயிரோடு கலந்த உறவு-உயிர் பிரிந்திட
என் நெஞ்சில் நீங்காத சோகத்தின் வரவு

பிரிவைத் தாங்காத நெஞ்சம் தேம்பியழ
நெஞ்சில் நிலைத்த வடிவமோ, வடிவேலானாய்க்
காட்சி தர, இறை தந்த கொடை நட்பு
நண்பா அமைதியில் நீ உறங்கு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-31-05-2024

ஒரு சிரட்டைக் கஞ்சி





தமிழர் உரிமைக்கான விடுதலைப் போராட்டம்
குருதி நீரோட்டமானது, உலகம் கைவிட
மண்ணும், கடலும் சிவந்திட, வானம் அழுதிட
பல்லாயிரம் உயிர்கள் அவலமாய்ப் பறிபோனது

இறுதிக் கட்டப்போரில் உயிர் காக்க,
ஊர் விட்டு ஊரோடிய நாடோடி இனம்
முள்ளி வாய்க்காலில் கைதியானது-யுத்தம் முடிந்தும்,
காயாத இரத்தம் கடவுளைக் கதறியழைக்கின்றது

மாவீரன் மடிந்து மறைந்திட-தமிழ்
ஈழம் கலைந்த கனவானது
ஈழவர் போராட்டம் வரலாறானது
கண்ணீர் எம் சொந்தமானது



Amnesty International chief Agnes Callamard, third from right, attends a commemoration ceremony at Mullivaikkal village in northern Sri Lanka



உணவின்றி, மருந்தின்றி, மாற்றுடையின்றி
நாறி நலிந்த சமூகம், உள்ள அரிசியை
உப்பின்றி, காய்ச்சி, சிரட்டைகளில் பகிர்ந்து
உயிர் காத்த நிகழ்வு கல்லில் எழுத்தானது

பட்ட பெருந்துயரை நினைந்து, பரிதாபமாய்க்
காணமல் ஆக்கப்பட்டவருக்காய் கண்ணீர் சிந்தி
கஞ்சியைப் பகிர்ந்து எடுத்த நினைவேந்தல்
பேரினவாதிகளுக்கு புரட்சியானது

உணர்வு பூர்வமான நிகழ்வை, வட கிழக்கில் அனுஷ்டிக்க,
தெருவோரம் கஞ்சி வழங்கிய தாய்க்குலத்தையும்,
பல்கலைக் கழக மாணவர்களையும் அச்சுறுத்தி அடக்கிய
காவல் துறை, கைகட்டி வாய் பொத்தி நின்ற நீதித்துறை



ஈழத் தமிழர் போராட்டம் வரலாறானது, பட்ட துயரோ
எண்ணிலடங்காது-உயிர் காக்க பகிர்ந்த உப்பிலாக் கஞ்சி
அகிம்சையின் ஆயுதமானது, கஞ்சியோ புதுப் புரட்சி,
உலகு காண தமிழ் மனங்களில் புத்தெழுச்சியானது

அறிவுக் களைஞ்சியமான யாழ் நூலகம் தீக்கிரையானது,
அகிம்சை வழி நின்றபெருமானின் அட்டாங்க மார்கமும்,
பஞ்ச சீலமும், தம்ம போதனையும் பௌர்ணமி நிகழ்வானது
இனவாத நெருப்பு இன்றும் அணையாமல் எரிகின்றது



வடக்கில் பண்ணிழந்து யாழ் வாட
கிழக்கில் பாட்டிழந்து பாடும் மீன்கள் சோர
கரை மோதிக் கதறும் கடல்-ஓயாது
நெஞ்சில் அலைமோதும் -காணமல் ஆக்கப்பட்டு
உயிரிழந்த உறவுகளின் குரல்

இதயச் சுமைளை இறக்கி வைக்க
ஒரு சுமை தாங்கி இல்லை
எங்கள் விழி நீர் துடைக்க-உறவாய்
எந்தக் கரங்களுமில்லை

எமக்காய் குரல் கொடுக்க நீதி தேவதையில்லை-
நொருங்கிய உள்ளத்தை குணமாக்க மருந்துமில்லை
இனம், மதம் கடந்து உயிர் காக்க-மனித நேயமில்லை,
நல்ல சமாரியனை காண மனம் தவிக்கும் நிலை

மறைக்கப்பட்ட உண்மை-மறுக்கப்பட்ட
நீதியாக, மனம் வாடுது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-23-05-2024

Lost evenings, lost lives,
Tamil hearts bear the weight,
Of a war that tore families apart,
And left scars etched in fate.

The Jaffna Library, once a beacon,
A repository of knowledge and light,
Reduced to ashes by flames of hate,
The Buddha murdered in the night1.

The monsoon rivers weep silently,
As they carry away the pain,
From the leaves of ancient bo trees,
To the hearts of those who remain.

In a time of burning, we seek solace,
In words that echo our collective grief,
For poetry transcends borders and time,
And offers a balm to our wounded belief.(By Charles Sarvan)


பக்தி

ஊரெங்கும் கோயில், ஆலயம், மசூதி, விகாரைகள்
முச்சந்திகளிலும் தெருவோரங்களிலும் வணங்கிடச் சிலைகள்
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது -அறிந்தும்
மனங்களில் ஓயாத இனவாத, மதவாத அலைகள்






அதிகாலையை மாசாக்கும் ஒலிபெருக்கிச் சத்தங்கள்
மதவாதப் பீரங்கியாய் நாளும் யுத்தங்கள்
நீறு, தொப்பி, சிலுவை, காவி வேடங்கள், அன்பு,
மனித நேயமோ காணாமற்போன துரதிஷ்டங்கள்




அனுமான், பிள்ளையார், புனித அந்தோனியார்,
புத்தர் பெருமான் சிலைகள், பக்தி அலைமோதும்
மனங்களில், எல்லாம் பகல் வேஷங்கள்
அனுபூதிமான்களுக்கு இவை வேடிக்கைகள்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்-
வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுரவாசல்,
தெள்ளத் தெளிந்தாருக்கு சீவன் சிவலிங்கம்,
கள்ளப் புலனனைத்தும் காளாமணி விளக்கே



அனுபூதிமானுக்கு உள்ளமே ஆலயம்
நடமாடும் தெய்வமே மனிதம்
ஆலயம், கோயில், மசூதி, விகாரை
கடந்த மனிதன் ஆன்மிகவாதி



அழுகைச் சுவரிலும், அல்அ.்.க்ஸா பள்ளியிலும்
பாபர் மசூதியிலும், இராமர் கோயிலிலும்
சஹரான் குண்டு வெடிப்பிலும் மதவாதங்கள்
இனவாதங்கள், கடவுளுக்கோ பல்லாயிரம் நாமங்கள்?

அன்பே தெய்வம், உண்மையே வேதம்
அகிம்சையே அமைதியின் நாதம்-மனிதத்தைப் பிரிக்கும்
வேதங்களெல்லாம் கற்பனைகள் என்போம்
உள்ளுணர்வின் உயர் நிலையே கடவுள் என்போம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06-2024

பயணம்




பல நாள் ஒத்தி வைத்த பயணம், மனம் தீர்மானிக்க,
ஒரு நாள் அந்தி மாலையில் தொடங்கிய பிரயாணம்
பாதை நெடிது, பொழுது சாய்ந்திட, இருளின் வரவு


இருள் சூழ்ந்த பாதையில் வெளிச்சம் தர நிலவில்லை,
பாதை மாறிய பயணத்தில் பாழுங் கிணற்றில்
விழுந்த துர்ப்பாக்கிய நிலை எனது

வேதனையின் உச்சத்தில் எழுந்திருக்கப் பலமில்லை
நிலவு உதிக்க, அமுத வெள்ளம் என்னைச் சூழ
ஆழ் கிணறு தெரிந்தது, ஆபாத்பாந்தவனாய்
யாருமில்லை புரிந்திட அச்சம் ஆட்கொண்டது




என் குரல் கேட்டு-வெண் தாடி மார்பைத் தொட,
விசாலமான ஞானம் முகத்தில் பளிச்சிட,
விளக்கோடு வந்த மனிதர், இரவில் விளக்கின்றி
அறிவிலியே ஏன் தொடர்ந்தாய் பயணம்? கடிந்தார்

வழித்துணையின்றி, விளக்கின்றி உன் பயணம்
உன் வீழ்ச்சிக்கு உன் அறியாமையே காரணம்
காரண காரியமின்றி ஏதுமல்லை, அறியாமையின்
பலனை அனுபவித்தே தீரவேண்டும் கூறிச் சென்றார்

சில மணிகள் செல்ல, கருணை வடிவான ஒருவர்
என் குரல் கேட்டு வந்தார், உதவி செய்ய என்னால் முடியாது,
கிணறோ ஆழம், ஆயினும் படிக்கற்கள் பக்கத்தில் உண்டு,
பாதை காட்டினேன் ஏறி வாருங்கள் மொழிந்து சென்றார்

வேதனையின் உச்சத்தில் நான் புலம்ப, குரல் கேட்டு வந்த
இளைஞர், படும் துயர் கண்டார், ஒரு மொழி சொல்லாது
இறங்கி வந்து என்னைத் தம் தோளில் சுமந்து உயிர் காத்தார்

நம் துன்பத்திற்கு நம் அறியாமையே காரணம்
விவேகத்தை வலியுறுத்தும் பகுத்தறிவாளி கொன்பூசியஸ்,
பாதை காட்டிய பெருமான் புத்தர்-என்னுயிரைக் காக்க
தன்னுயிரைப் பணயம் வைத்த இயேசு பெருமான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-05-2024

சாம்சன்-டிலைலா



எபிரேயர் விழிகளிலோ காயாத ஈரம்-வாக்களித்த
வளநாட்டில் நாமோ அடிமைகள் என்ற மாறாத துயரம்
வல்ல இறைவன் காப்பார் என்ற வற்றாத நம்பிக்கை
வந்து குடியேறிகளை அழிப்போம் பிலிஸ்தியரின் உறுதி



பிலிஸ்திய அடிமைத்தனத்தில் யூத இனம், இறை தேர்ந்த
இரட்சகன் சாம்சனோ வலிமையில் சிங்க இனம்
தம் இனத்தைக் கொன்று குவித்த பிலிஸ்தியர் மனதிலோ,
சாம்சனை வீழ்த்திடும் தீராத வெஞ்சினம்

சிங்கத்தை வெற்றுக் கரங்களால் கொன்ற வீரன், கழுதையின் தொடை
எலும்பால் பல பிலிஸ்தியரை வீழ்த்திய சூரன், காதலிக்காய்
கோதுமை வயல்களை எரித்தாடிய தாண்டவம், மனம் கொண்டவளை
எதிரிகள் தீக்கிரையாக்கிட, மனதிலே நீங்காத சோகம்

போராடி, எதிரிகளைப் பந்தாடி, காயமுற்று
மயங்கிக் கடந்த வீரனைக் காத்த மங்கை-காதலால்
புண்பட்ட நெஞ்சம் குணம்பெற, காதலாகி
தன் நெஞ்சில் களிப்புற்ற நங்கை டிலைலா

மோகன பிம்பம், காமினிக்குத் தங்கையான
பந்தம், இனம், மொழி கடந்து காதலாகிக்
கனிந்த உறவு, இரு மனங்கலந்திட-வாழ்விலோ
புது வசந்தம், வாழும் இறைவனோ சுகந்தம்





பங்கய முகமோ மலரினம்-பூங்கொடி
இடையோ கொடியினம்-தங்கமாய்
மின்னும் அங்கங்கள் அழகினம்-செவ்வாய்
மொழிகளிலோ நாணம் கலந்த நளினம்

அடிதளிரும், அங்கை மலரும், பங்கய
வதனமும், கொங்கை முகையும், குழற்காரும்,
கண் வண்டும் கன்னியழகானது, மதுமலரைச்
சுற்றும் வண்டாய் காளை மனம் ஆனது

காதற்காயமான மனதுக்கு கன்னி அன்போ
ஔடதம், குணமான மனதிற்கு மலர் மணமான
மங்கை, கூடி வாழ்ந்த காலத்தில் பொங்கும்
புதுப்புனலாய் பொங்கிப் பாய்ந்த காதல் கங்கை



சுரிகுழலில் சுந்தர மலர்கள் ஆட
பிறை நுதலில் வண்ணத் திலகம் கவி பாட
வெண்சங்குக் கழுத்து மணமாலை சூட
பூந்துகில் மூடிய பொன்மேனியிலோ சுகந்தம்



செந்தேன் மொழியாள் தேற்றி
செவ்வாய் அமுதால் காதலனைப் போற்றி
தலை சாய்க தாய் மடி ஈந்த அம்மை-கட்டி
அணைத்து காதலைக் கொண்டாடிய பெண்மை

புண்பட்டு, பண்பட்டு காதலில் விழுந்த பெண் சிட்டு,
கண்பட்டதோவென புண்பட காட்டிக்கொடு சாம்சனை,
இல்லையேல் மாண்டுவிடு பயமுறுத்திய பிலிஸ்திய
வஞ்சகம், அஞ்சுகத்தின் நெஞ்சத்திலே ஆறாத் துயரம்

இனவாதக் கூண்டை விட்டுப் பறந்த கிளி-
சாம்சன் கொஞ்சும் காதல் கிளி-சிறகடித்து
உயரப் பறக்குமுன், வல்லூறாய் அச்சுறுத்தி
டிலைலாவைப் பணிய வைத்த ஆட்சி மொழி



படைப்பலத்தால் வெல்ல முடியாத அரியை
பாவை டிலைலா துணை கொண்டு வீழ்த்த முயன்ற
குள்ள நரிகள், உயிரச்சத்தால் வெள்ளிக்கு விலைபோய்
தன்னை இழந்தவள் மனதிலே நீங்காத சோகம்



கொஞ்சும் கிளியாய் காதல் மொழிந்து
கோவை இதழ்களால் அமுது பரிமாறிய தேவதை
கட்டுக் குலையாத அழகால் காமன் கணையாய்
சாம்சனை வீழ்த்திய தேன்வதை

அழகோ கண்களுக்கு அருவிருந்து
அன்போ காயமான இதயத்திற்கு அருமருந்து
காதலை கொண்டாடி கடமையை மறந்த காளை
அறியாத நேரத்தில் மரணம் வந்த வேளை

வீரத்தின் வேரறிய வினவிய மங்கை
விடையாய் பகிர்ந்த மொழியோ பொய்மை

புதிதாய் பின்னிய ஏழு நார் கயிற்றால் என்னைப்
பிணைத்தால் என் வீரம் பறிபோகும்
ஆழ்ந்த உறக்கத்தில் சாம்சனைப் பிணைத்து
வீரர்களை அழைத்த மாது

நூலாய்க் கயிறுகள் அறுந்திட-குள்ள
நரிகள் அஞ்சி ஓடி மறைந்திட அரியென
எழுந்த சாம்சனைக் கண்டு அஞ்சி
வியந்த மங்கை, ரதிக்கோ தங்கை





கொஞ்சிக், கெஞ்சி கூறுங்கள் உங்கள்
பலத்தின் இரகசியத்தை மன்றாடிய நங்கை
புத்தம் புதுக்கயிறுகளால் கட்டினால்
என் வீரம் நலிந்திடும் மொழிந்த காளை

காதல் மொழிந்து, அயர்ந்த உறக்கத்தில் காளையைக்
கட்டிப்போட்டு, சாம்சன் எழுந்திருங்கள் வீரர்கள்
வந்துவிட்டார் மங்கை கூவிட, கயிறுகள் அறுந்திட
கர்ச்சித்த சிங்கம், மங்கை வாக்குக்கோ பங்கம்

உயிருக்குயிராய் உன்னை நேசித்தும்-அன்பே
உண்மை உரைக்கவில்லை, என் மீது நம்பிக்கையில்லை
நம் காதல் கானல் நீரா, கண்ணீர் மல்க கெஞ்சிய மாது
இதயம் திறந்து சொன்ன உண்மையால் வந்த தீது

உள்ளம் உடைந்திட உண்மையை உரைத்தான்
நசரேன் நான் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவன்
பிறப்பிலிருந்து என் முடி கத்தரிக்கப்படவில்லை
முடியை வெட்டிக் களைந்தால் என் பலம் நீங்கும்





மையல் நோயுற்று தையலாள் அழகில்
மயங்கி, தன் பணி இறை பணி மறந்த சாம்சன்
யாருமறியாத இரகசியத்தை பேதைக்குச்
காதலாகிச் சொல்லி அறிவிழந்த மூடன்

உரைத்தது உண்மை என உள்ளம் நம்ப-ஆழ்ந்து
உறங்கிடத் தூக்கமருந்து கொடுத்து-முடியைக்
கத்தரித்து, வீரரை அழைத்த டிலைலா-புலியாய் பொங்கி
எழுந்தும், புஜபலமின்றி செம்மறியாய் வீழ்ந்த வீரன்

வீரர்கள் சூழ்ந்து தாக்கிட, முடியோடு
வீரம் விலகிட, அரியான வீரனோ முடிவில்
செம்மறியாய் ஆன அவலம், கைதியோ சங்க நிதி
பிலிஸ்திய வீரர்களுக்கு பரிசோ பெருநிதி

ஊரெங்கும் ஆரவாரம், பெருவீரனைச் சிறைப்பிடித்தோம்
என்ற அமர்க்களம், இனி ஏது போர்களம்

வதையின் உச்சத்தில், பழுக்கக் காய்ச்சி இரும்பால்
பறிபோன விழிகள், கைதியாய் சிறைப்பட்டு
கசையடிபட்டு, செக்கு மாடாய் கோதுமை அரைக்க,
பலமிழந்த சிங்கத்தின் பரிதாப நிலைகள்



முடியிழந்து பலம் நீங்கிட, முடியிழந்த
மன்னனாய் மனம் வெதும்பிட, கண்ணிழந்து
கபோதியாகிட, நெஞ்சம் இறைவனை
எண்ணிப் புலம்பியது மன்னிப்பை வேண்டியது



வெள்ளிக்காய் காட்டிக் கொடுத்து
வீரக் காதலனை இழந்த கோதை விழிகளில்
கண்ணீர் மாலை, நெஞ்சில் தீராத
சோகத்தைச் சுமந்த டிலைலாவோ அபலை

பேரழகு சோர, சேல்விழிகள் சிவக்க, பிறை நுதலில்
நீரரும்பப் அழுத பேதை, மனங்கவர்ந்த மாவீரனை
காட்டிக் கொடுக்க, அச்சுறுத்தி பணிய வைத்த-பிலிஸ்திய
காவலனை மனதார தூற்றிப் புலம்பிய கோதை

மாவீரனை வீழ்த்திய பிலிஸ்திய தெய்வம் “டேகோனுக்கோ”
நன்றிப் பெருவிழா, பெருமண்டபத்தை தாங்கி நின்ற
இரு பெருந்தூண்களுக்கிடையே காட்சிப் பொருளான
கைதியும், கபோதியமான சாம்சனுக்கோ மரண விழா



வதையால், வசையால் வாழும் யூத இறைவனைப்
பழித்த இனம், சாம்சனை சிறைபிடித்த
“டேகோனே”உண்மைத் தெய்வம்
என முழங்கிய பிலிஸ்திய ஆணவக் குணம்



கண்ணிழந்த கபோதியாகி, கைதியோ
காட்சிப் பொருளாக, கூடி வந்த கூட்டத்திற்கு
வேடிக்கையாக, வசையும், வாதையும் ஓயாது வருத்த
நொந்த மனம் இறைவனைக் கெஞ்சியது

இரங்கும் இறைவா, உம் புகழ் விளங்க-என்மேல்
ஒரு முறை இரங்கும், இரஞ்சிய மனம், இரு கரம் நீட்டி
இரு தூண்களை இடித்திட, இரும்பான கரங்களில்
இறைபலம் கூடி வர நொருங்கிய மண்டபம்
சாம்சன் ஆடிய இறுதி ருத்திரத் தாண்டவம்

ஆரவாரத்தால் அதிர்ந்த அரங்கம் மட்பாண்டமாய்
விழுந்து நொருங்க, மக்களும், மன்னனும், அவலமாய் மடிய,
துண்டு துண்டாய் நொருங்கிக் கிடந்த டேகோன் சிலை
ஒன்றாய் மாண்டு கிடந்த டிலைலா, சாம்சன் காதல் நிலை

வாழும்போது சாம்சன் கொன்றழித்த பிலிஸ்தியரோ சில நூறு,
கைதியும், கபோதியுமாகி, இறை பலத்தால், இறக்கும்போது
மடிந்த பிலிஸ்தியரோ பல்லாயிரம், அரசன் அன்று
கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் வேதவாக்கானது



உள்ளம் குமுற, ஒளியிழந்த விழிகளில் நீர் கசிய
இறைவனை இரந்த நெஞ்சம், எல்லாம் முடிந்ததெனச் சொல்ல,
இடிந்து தகர்ந்து விழுந்த மண்டபம், மடிந்து பிணமாகிட
உலகம் நாடகமேடை, நாமோ நடிகர் என்றான நிலை

அன்று பிலிஸ்தியரோடு தொடங்கிய போராட்டம்
இன்று பலஸ்தீனரோடு தொடர, எங்கும்
குருதி நீராட்டம், கோலியாத்தை கொன்ற தாவீது
இன்றும் பயங்கரவாதிகளோடு போராடும் யூதர்களின் வீறு

போராடிப் பெற்ற நிலத்தில் வாழ்வோ
நாளும் போராட்டம், இறை தந்தை நிலம்,
இஸராயேல் நாமே இறை தேர்ந்த இனம்
ஏகன் இறைவனை மறவாத குணம்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-5-24

யுத்தமும், இரத்தமும்



மண்ணின் தணல் ஆறவில்லை-புண்ணான மனதில்
புலம்பல் ஓயவில்லை, செவ்விழிகளில்
ஈரம் கயாவில்லை, கண் மறைந்த உறவுகள்
காணாமல் ஆக்கப்பட்ட துன்ப நிலை



வானும், மண்ணும், கடலும் குண்டு மழை பொழிய
உயிர் பிழைக்க, ஊர் விட்டு ஊரோடி, முள்ளிவாய்காலில்
அகதியும், கைதியுமான இனம், கண்ணீரும், குருதியும்
கங்கையாய்ப் பாய பலிக்கடாவான தினம்

ஈழத் தழிழர் விடுதலைப் போராட்டம்
கலைந்த கனவானது, கண்ணீரும், செந்நீரும்
காலமெல்லாம் சொந்தமானது, ஊரும், மனையும்
இடிபாடானது, சொந்த பந்தம் காணமற் போனது



உயிரும், உடைமைகளும் ஒன்றாய் எரிந்திட
கழனி காடாகி, கால் நடைகள் மடிந்திட
கண்ணீரத் தவமிருக்கும் அகதிகள்-நாளும்
மண்ணிலும், தீயிலும் மறையும் உறவுகள்



முறிந்த பனைகள் சாய்ந்து கிடக்க
எரியும் சடலங்கள் கருகி மணக்க
கண்ணீரும், குருதியும் காயாது நிலைக்க
காற்றினிலே வரும் ஒப்பாரி, புலம்பல்

யுத்தங்கள் புரிந்து, கங்கையாய் இரத்தங்கள் சிந்தி
மனிதம் கண்டது ஏதுமில்லை, அலையலையாய்
எழுந்து வீழ்ந்த வல்லரசுகள் ஒன்று கூட
வரலாற்றில் என்றும் நிலைத்ததில்லை

பெருமான்கள் புத்தர், இயேசு கண்ட அமைதி
மனித மனங்களில் இல்லை, போதியும்,
சிலுவையும் வாழ்வில் மாறாத நிலை, சொர்க்கம்
நரகம், இறைவன், அலகை நம் உள்ளத்து நிலை

கங்கையை கண்ணில் வைத்து
காங்கையை நெஞ்சில் வைத்து-நொந்தழும்
சொந்தங்களுக்கு சோகம் சொந்தமான நிலை
வாழ்வே மாயம் என்றான அவல நிலை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06-2024